**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 05 of 2026**

**Prosecution Witness : PW1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : மாரிமுத்து | **Taluk** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Age** | : |

**<u>(Accused Present)</u>**

**Dated.01.06.2026**

<u>**முதல் விசாரணை**</u>

நான் திருப்பட்டுரில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். வழக்கு விபத்தில் இறந்துபோன ராமச்சந்திரன் என்னுடைய அப்பா ஆவார். கடந்த 04.06.2025 ம் தேதி மதியம் 12 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது, எனது நண்பர் போன் செய்து எனது அப்பா கீழே விழுந்துவிட்டதாக சொன்னார். தகவல் கேள்விபட்டு இருங்களூர் SRM மருத்துவமனை சென்று எனது அப்பாவை பார்த்தபோது அவர் இறந்துவிட்டார். எனது அப்பா நடந்து சென்றபோது வண்டி அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விபட்டேன். வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது. அதன்பிறகு சிறுகனூர் காவல் நிலையம் சென்றபோது, போலீசார் எழுதப்படாத வெள்ளை பேப்பரில் கையொப்பம் பெற்றுக் கொண்டனர். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.1/அ.சா.1** ஆகும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

<u>கு.வி (அரசு தரப்பில்)</u>

கடந்த 04.06.2025ம் தேதி திருவெறும்பூரில் உள்ள எனது மாமியார் வீட்டின் விஷேசத்திற்கு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. எனது அப்பா ராமச்சந்திரன் அவரது அக்கா மகனான எதிரியுடன் திருச்சி சென்று காரின் உதிரி பாகங்களை வாங்கிக்கொண்டு TN 48 AR 7486 என்ற பதிவெண் உடைய இருசக்கர வாகனத்தில் திருச்சியிலிருந்து கொணலையில் உள்ள பசுபதி என்பவரது கார் பட்டறைக்கு செல்ல வேண்டி கல்பாளையம் பிரிவு ரோட்டில் இருந்து கொணலை நோக்கி சென்னை–திருச்சி ரோட்டில் எதிர் திசையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி மதியம் 02.30 மணியளவில் ஆஜர் எதிரி இருசக்கர வாகனத்தை ஓட்ட எனது அப்பா பின்னால் அமர்ந்து கொண்டு சென்றபோது, எதிரியானவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் இருசக்கர வாகனத்தை ஓட்டியதால் எனது அப்பா நிலை தடுமாறி இருவரும் கீழே விழுந்தார்கள் என்றால் சரியல்ல. அந்த விபத்தில் எனது அப்பாவிற்கு தலையில் உள்காயமும், கை, கால்களில் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கு மூக்கில் இரத்தக்காயமும், கால்களில் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டது என்றால் சரியல்ல. பின்னர் இருவரும் 108 ஆம்புலன்ஸ் மூலமாக இருங்களூர் SRM மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள் என்றும், எனது அப்பா வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக மருத்துவர்கள் பரிசோதித்து பார்த்துவிட்டு கூறினார்கள் என்றும், நான் இருங்களூர் SRM மருத்துவமனை சென்று எனது அப்பாவின் பிரேதத்தை பார்த்தேன் என்றும், பின்பு 05.06.2025ம் தேதி போலீசார் ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனையில் பிரேத விசாரணை

மேற்கொண்டார்கள் என்றும், மேற்படி வழக்கு சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கக்கோரி புகார் மனு கொடுத்தேன் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரியானவர் எனது மாமா என்பதால் அவரை வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>–** இல்லை

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.06.01 16:57:08 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 05 of 2026**

**Prosecution Witness : PW2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: ரகுநாத்** | **Taluk** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Age** | **:** |

**(Accused Present)**

**Dated.01.06.2026**

**முதல் விசாரணை**

நான் திருப்பட்டுரில் வசித்து வந்து JCB ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான்.சுமார் ஒரு வருடங்களுக்கு முன்பு தேதி, மாதம் தற்போது ஞாபகமில்லை. மாலை சுமார் 5 மணியளவில் சிறுகனூர் காவல் நிலையம் சென்றபோது போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க மேற்படி கையெழுத்தை நான் போட்டுக் கொடுத்தேன். அந்த கையெழுத்தை நான் எதற்காக போட்டுக் கொடுத்தேன் என்று எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2/அ.சா.2** ஆகும். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**கு.வி (அரசு தரப்பில்)**

கடந்த 04.06.2025ம் தேதி நானும், பாரதி சிவம் என்பவரும் சென்னையிலிருந்து திருச்சி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் கொணலை அருகே இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. அப்போது இரவு 10.30 மணியளவில் போலீசார் எங்களது முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. அந்த பார்வை மகஜரில் நானும், பாரதி சிவம் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம் என்றால் சரியல்ல. மேற்படி விசயங்களை போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்)</u>– இல்லை

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.06.01 16:57:18 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி